# தகவல் வழங்கும் அலுவலர் மற்றும் தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (மேல்நிலைக்கல்வி) செயல்முறைகள், சென்னை - 6.

## ஒ.மு.எண். 118007/டபிள்யு2/இ2/09, நாள்: 31.12.09

பொருள் : தகவல் அறியும் உரிமைச் சட்டம் - 2005 ன் கீழ் திண்டுக்கல் மாவட்டம் திரு. வி. புஷ்பநாதன் என்பவரால் கோரப்பட்டுள்ள விவரங்கள் - சார்பு.

பார்வை : திரு. வி. புஷ்பநாதன் விண்ணப்பம் நாள் : 4.12.09

பார்வையில் காணும் திண்டுக்கல் மாவட்டம், திரு. வி.புஷ்பநாதன் என்பவரால் தகவல் அறியும் உரிமைச் சட்டம் - 2005ன் கீழ் கேட்கப்பட்டுள்ள விவரங்களுக்குக் கீழ்க்கண்டவாறு தகவல் அளிக்கப்படுகிறது.

| வ.எண் | கேள்வி | அளிக்கப்படும் பதில் |
|---|---|---|
| 1. | அரசு மேல்நிலைப்பள்ளிகளில் தற்பொழுது அரசால் அங்கீகரிக்கப்பட்ட உதவித் தலைமை ஆசிரியர்களின் எண்ணிக்கை தகுதி வாரியாக.. | அரசு மேல்நிலைப் பள்ளிகளில் உதவித் தலைமை ஆசிரியர் பணியிடம்<br>6 முதல் 8 வகுப்புகளுக்கு - 1<br>9 முதல் 10 வகுப்புகளுக்கு - 1<br>11 முதல் 12 வகுப்புகளுக்கு - 1 |
| 2. | அரசு மேல்நிலைப் பள்ளிகளில் உதவித் தலைமை ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் பணிப் பகிர்வு (Number of Periods- Per week) மேல்நிலை - பட்டதாரி, இடைநிலை - தகுதிவாரியாக. | மேல்நிலை உதவித் தலைமை ஆசிரியர்- 15 பாடவேளைகள்<br>பட்டதாரி உதவித் தலைமை ஆசிரியர்- 15 பாடவேளைகள்<br>இடைநிலை உதவித் தலைமை ஆசிரியர் - 15 பாடவேளைகள் |
| 3. | பள்ளி நிர்வாகத்தில் உதவித் தலைமை ஆசிரியர்களின் பங்கு - பள்ளித் தேர்வுகள் - மாணவர்கள் தேர்ச்சிப் பட்டியல் தகுதி வாரியாக | கற்றல் கற்பித்தல் பணி மற்றும் பள்ளி விழா நடத்துதல் பணிச் சார்பான செயல்பாடுகளை மேற்பார்வையிடவும் மாணவர்கள் தேர்ச்சிப் பட்டியல் சார்பாக கீழ்க்கண்ட வகுப்பு வாரியாக உதவி தலைமை ஆசியர்கள் பங்கேற்கின்றனர்.<br>6 முதல் 8 வகுப்புகளுக்கு- இடைநிலை ஆசிரியர்கள்<br>9 முதல் 10 வகுப்புகளுக்கு - முதுகலை ஆசிரியர்கள். |
| 4. | உதவித் தலைமை ஆசிரியர் - தலைமை ஆசிரியர் பொறுப்பு வகிக்கும்போது பள்ளியில் நடைபெற்ற அசம்பாவிதங்களுக்கு பொறுப்பு எற்பது யார் ? மேல்நிலை உதவித்தலைமை ஆசிரியர் மட்டுமா ? பள்ளி உதவித் தலைமை ஆசிரியரும் பொறுப்பு ஏற்க வேண்டுமா ? | முதுகலை ஆசிரியர் நிலையில் மேல்நிலைப் பிரிவுகளில் பணியாற்றும் உதவித் தலைமை ஆசிரியர் மட்டும். |
| 5. | பள்ளித் தேர்வுகளை நடத்த தலைமை ஆசிரியருக்கு உதவியாகத் தேர்வு நடத்துவது யார் ? எந்த நிலை உதவித் தலைமை ஆசிரியர் ? | மேல்நிலைப் பிரிவு உதவித் தலைமை ஆசிரியர் (PG Cadre) |

ஒப்பம்

தகவல் வழங்கும் அலுவலர் மற்றும்
இணை இயக்குநர் (மேல்நிலைக்கல்வி)